007

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப் பீடம்

விசேட தேவைகள்சார் கல்வித் துறை

விசேட தேவைகள்சார் கல்வியில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் - 2020/2021

இறுதிப் பரீட்சை - 2022

SNP 8338/ESP2138 – கல்வி வழிகாட்டலும் ஆலோசனை கூறலும்

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி: 18.09.2022 நேரம்: மு.ப. 9.30 - பி.ப 12.30

பகுதி - 1 இல் அமைந்துள்ள அனைத்து வினாக்களுக்கும் பகுதி - 2 இல் எவையேனும் மூன்று (03) வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

## பகுதி – I

1. பாடசாலை தொழில் வழிகாட்டல் ஆலோசனை சேவையின் **ஐந்து (5)** குறிக்கோள்களைக் குறிப்பிடுக.
2. 'ஆலோசனை கூறல் ஒரு அபிவிருத்திச் செயன்முறை' எனக் கருதப்படும். பொருத்தமான உதாரணங்களுடன் இக்கூற்றினை நியாயப்படுத்துக.
3. விசேட கல்வித் தேவைகளைக்கொண்ட மாணவர்களிடத்தில் மனஅழுத்தத்தை ஏற்படுத்தும் பாடசாலைச் சுற்றாடல்சார்ந்த காரணிகள் **மூன்றினை (3)** விளக்குக.
4. நடத்தைவாத பிணிநீக்கல் அணுகுமுறையின் அடிப்படைத் தத்துவத்தை சுருக்கமாக விளக்குக.
5. பாடசாலை வழிகாட்டல் ஆலோசனைச் சேவையின் மேற்றொடர் செயன்முறையின் நன்மைகள் **மூன்று (3)** பற்றி கலந்துரையாடுக.
6. விசேட தேவையுடைய பிள்ளைகளுடன் வேலை செய்யும் ஆலோசகர் ஒழுக்கக் கோவையைப் பின்பற்ற வேண்டியதன் முக்கியத்துவத்தினை **இரண்டு** (2) காரணிகளின் துணையுடன் விளக்குக.
7. உளவியல் ஆலோசனை கூறலின் **மூன்று (3)** குறிக்கோள்களைக் குறிப்பிட்டு விசேட தேவைகள் கொண்ட பிள்ளைகளின் பெற்றோர்களுக்கு அது ஏன் முக்கியத்துவம் உள்ளதாக அமைகிறது என விளக்குக.
8. விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கு ஆலோசனைகூறல் நுட்பங்களைப் பிரயோகிக்கும் போது முகங்கொடுக்கும் சவால்கள் **மூன்றினைக் (3)** குறிப்பிடுக.

( 5 x 8= 40 புள்ளிகள்)

## பகுதி II

9. ஆசிரியர்கள் என்ற வகையில் உங்களுடைய வகுப்பறையில் வேறுபட்ட இயலாமைகள் மற்றும் விதிவிலக்கான இயலுமைகள் கொண்ட மாணவர்களை நீங்கள் சந்தித்து இருப்பீர்கள்.

i). பேச்சு தொடர்பான பிரச்சினைகளைக்கொண்ட பிள்ளைகளிடத்தில் அவதானிக்கக்கூடிய பொதுவான பண்புகள் **மூன்றினைக் (3)** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

ii). பேச்சு தொடர்பான பிரச்சினைகளைகளை எதிர்நோக்கும் பிள்ளைகளின் கற்றலுக்கு உதவும் போது பின்பற்றவேண்டிய **மூன்று (3)** உபாயங்களை விளக்குக. (9 புள்ளிகள்)

iii). மீத்திறன்கொண்ட மாணவர்களிடத்தில் விசேட கவனம் செலுத்தவேண்டியதன் முக்கியத்துவத்திற்கான காரணங்கள் இரண்டு (2) பற்றி கலந்துரையாடுக.. (8 புள்ளிகள்)

10. விசேட தேவையுடைய மாணவர்களுடைய பொருத்தப்பாட்டினை நோக்கமாகக் கொண்டு பாடசாலை நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கமைக்கும் போது விசேட அம்சங்கள் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

i). பொருத்தமான வரைவிலக்கணத்தினை முன்வைத்து பொருத்தப்பாடு பற்றிய எண்ணக்கருவை விவரிக்குக. (4 புள்ளிகள்)

ii).

a. விசேட தேவையுடைய பிள்ளைகளின் பொருத்தப்பாட்டு ஆளுமை விருத்தியை நோக்கமாகக்கொண்டு நிகழ்ச்சித் திட்டத்திற்கான செயற்பாடுகளை திட்டமிடும் போது கவனத்தில் கொள்ளப்படவேண்டிய விசேட அம்சங்கள் **இரண்டினைக் (2)** குறிப்பிடவும். (2 புள்ளிகள்)

b. மேலே நீங்கள் முன்வைத்த விசேட அம்சங்களினுள் ஒன்றினை அடைந்து கொள்வதற்கு நடைமுறைப்படுத்தக்கூடிய செயற்பாடுகள் **மூன்று (3)** பற்றி விளக்குக. (6 புள்ளிகள்)

iii.) மேலே குறிப்பிட்ட செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் போது எதிர்நோக்கக்கூடிய **இரண்டு (2)** சலால்களையம் அவை ஒவ்வொன்றிற்கும் பொருத்தமான பரிகார நடவடிக்கைகளையும் பற்றிக் கலந்துரையாடுக? (8 புள்ளிகள்)

11.

i). கற்றல் இயலாமை எனும் பதத்தினை விளக்குக? (3 புள்ளிகள்)

ii). ஆரம்ப பிரிவில் கற்கும் கற்றல் இயலாமை கொண்ட மாணவர்கள் கீழ்வரும் துறைகளில் வெளிக்காட்டும் எச்சரிக்கை அடையாளங்கள் அல்லது கற்றல் குறைபாட்டிற்கான குறிகாட்டிகளை விபரிக்குக (ஒவ்வொரு துறைக்கும் **மும்மூன்று** குறிப்பிடுக).

அ. மொழி
ஆ. சமூக நடத்தைகள் (9 புள்ளிகள்)

iii). ஆசிரியர் என்ற வகையில் அத்தகைய பிள்ளைகளின் கற்றலை மேம்படுத்தவதற்காக மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளை (ஒவ்வொரு துறைக்கும் **இவ்விரண்டு** நடவடிக்கைகள்) விளக்குக .

(8 புள்ளிகள்)

12.

i). இருத்தலியலில் அணுகுமுறையிலான உளச் சிகிச்சையின் தத்துவ அடிப்படைகளை விளக்குக?

(4 புள்ளிகள்)

ii). இருத்தலியலில் அணுகுமுறையிலான உளச் சிகிச்சையின் உளச்சிகிச்சையளித்தல் வழிமுறைகளை விபரிக்குக.

(8 புள்ளிகள்)

iii). அ. இருத்தலியலில் அணுகுமுறையினைப் பயன்படுத்தி சிகிச்சையளிக்கக்கூடிய **இரண்டு (2)** வகையான ஆலோசனை நாடிகளைக் குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

ஆ. இந்த உளச் சிகிச்சை அணுகுமுறையின் **இரண்டு (2)** பிரதான வரையறைகள் பற்றி கலந்துரையாடுக.

(6 புள்ளிகள்)

13.

i). வகுப்பறையில் இயலாமையுடைய மாணவர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் **மூன்றினை (3)** விளக்குக.

(6 புள்ளிகள்)

ii). உள்ளடங்கல் வகுப்பறையில் ஆசிரியர் முகங்கொடுக்கும் சவால்கள் **மூன்றினை (3)** விபரிக்குக.

(6 புள்ளிகள்)

iii). இயலாமையுடைய மாணவர்களுக்கு உதவுவதில், பாடசாலை ஆலோசகர் மற்றும் உள்ளடங்கல் வகுப்பறையில் கற்பிக்கும் ஆசிரியரின் வகிபாகங்கள் பற்றிக் கலந்துரையாடுக.

(8 புள்ளிகள்)

14. பரிசோதனைசார் ஆலோசனை நுட்பங்களில் அவதானிப்பு மிகவும் பயனுள்ளதொரு நுட்பமாகும்.

i). ஆலோசகர் ஒருவர் அவதானிப்பினை மேற்கொள்ளும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய **நான்கு (4)** காரணிகள் பறறி விளக்குக.

(8 புள்ளிகள்)

ii). விசேடத் தேவையுடைய மாணவர்கள் பற்றிய தகவல்களை சேகரிப்பதற்காக அவதானிப்பு நுட்பத்தைப் பயன்படுத்துவதனால் பெற்றுக்கொள்ளக்கூடிய நன்மைகள் **மூன்றினை (3)** விவரிக்குக.

(6 புள்ளிகள்)

iii). விசேடத் தேவையுடைய மாணவர்களுக்கு வழிகாட்டல் மற்றும் ஆலோசனைச் சேவைகள் மிகவும் தேவைப்படுகின்றன. இக்கூற்றினை **மூன்று (3)** காரணங்களின் துணையுடன் நியாயப்படுத்துக.

(6 புள்ளிகள்)

*பதிப்புரிமை பெற்றது.*